பருக நீர் பாலைவனத்தில் ஏது?

விலை அரை அணா | 4 பக்கம் | Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (5—9—49) ஐ வெளியீடு (6—9—49) [இதழ் 27

குறிக்கோள் ஒன்றுதான்— ஆயினும் குவியும் இடம் வெவ்வேறுதானே?

இருநாட்டு முதலாளிகளுக்கிடையே மோதுதல்!

பிர்லா பிரபுவின் பணப்பற்றும் நாட்டுப்பற்றும்

போரின் பலனாகப் பல தொல்லைகள், நாடு, பிறதேசம் பாராமல், உலக மக்களைப் பிடித்துள்ளன. அதிலும், இந்தியத் துணைக்கண்டத்துக்குச் சம்பவித்துள்ள இன்னல்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. ஏகாதிபத்தியப் பிடியில் சிக்கி இருந்தக் காரணத்தால் ஏற்பட்ட [illegible]ங்கள் பலவற்றில், தொழில் வளம் தேவையான அளவிற்குப் பெருகாமல் போனது முக்கியமானதும், எல்லா கேடுகளுக்கும் முதன்மையானதும் ஆகும். பிறந்த நாட்டில் வேலை கிடைக்காமல் கடல் கடந்து, கூலிகளாகச் செல்வதும், சொந்தநாட்டிலும் பிழைப்புக்கு வேலையில்லாததால் வயிறு அரை வயிறு பட்டினியாக இருந்து வருவதும், அதனால் வந்த தொல்லைதான். பொதுவாக மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வழி இல்லாமலும், குறிப்பாக உழைப்பாளிகளின் வாழ்வும் உயர் மார்க்கமில்லாமலும், போனதற்கும், பெரும் பங்கு பழியை ஏகாதிபத்தியத்தின் மீது தான் சுமத்தியாக வேண்டும். ஏகாதிபத்தியப் பொருளியல் போக்கில் பொதிந்துகிடக்கும் உண்மை இதுதான.

அரசியல் விடுதலை கிடைத்துவிட்ட பின்னர், மக்களின் வறுமை தொலைய, நல் வாழ்வு கிடைக்க, நாடாள வந்தவர்கள் யாராக இருந்தாலும், தொழில் வளம் பல காணப் பணிபுரிவது தான் முறை - தேவையானதும் கூட. இந்த உயர்ந்த இலட்சியத்தை மனதில்கொண்டு, நாடாளும் பொறுப்பேற்றுள்ளவர்கள், மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, எல்லாத் துறைகளிலும் தொழில் வளம் பெருக்கச் சில பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுள்ளார்கள். அந்த நடவடிக்கைகளால், மக்கள் வாழ்க்கை மேலோங்கி, நாட்டின் நிலை உயருமா என்று ஆராய வேண்டியது அவசியந்தான். ஆனாலும், எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளிலே, வாழ்வு புரிக்குப் பாதை இருக்கிறதா, வறுமைபுரிக்குவழி இருக்கிறதா என்று இதுசமயம் பார்ப்பதைக்காட்டிலும், எவரை நம்பி, இவ்வினை மேற்கொள்ளப் படுகிறதோ, அவர்களின் செயல் எவ்வாறு இருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், செல்வப் பெருக்கத்திற்கும் மக்கள் வாழ்வு மங்களமாகத் துலங்குவதற்கும், சமதர்மப் பண்டிதர், பிர்லா-டாடா-ஸ்ரீராம் போன்ற தொழில் அரசர்களையும், இவர்களைக்காட்டிலும் அதிக அளவில் உள்ள அமெரிக்கத் தொழில் அரசர்களையும், அருந்துணையாகக் கொண்டிருக்கிறார். இவர்களின் நம்பிக்கையையும், அன்பையும், ஆதரவையும் பெற, தொழில்களைப் பத்து ஆண்டுகளுக்குள் தேசிய மயமாக்கப்போவதில்லை என்று உறுதி கூறியுள்ளார். அமெரிக்க முதலுக்குச் சலுகைகாட்டப்படும் என்று, சமயம் நேரும் பொழுதெல்லாம், சந்தேகத்திற்கிடமில்லாமல் சாற்றியும் வருகிறார். அதற்காகவே, தொழிலாளர் எழுச்சியைக்கிளர்ச்சியைப் பேச்சாலும் சட்டத்தாலும் மட்டந்தட்டியும் வருகிறார். தொழிலாளர் ஐக்கியத்தைக் குலைக்க, தம் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவு காட்டியும் வருகிறார். முதலாளிகளைத் திருப்திப்படுத்த இருக்கும் முறைகள் அனைத்தையும், ஒன்றுவிடாமல், செயலாற்றக் கூச்சமடையாமல், காரியத்தில் காட்டிவருகிறார். தங்களை இந்த அளவிற்குத் தாங்கி, தாங்கிப் பிடிக்கும் சமதர்மப் பண்டிதருக்கு, இந்தத் தொழில் அரசுகள் செய்யும் உபகாரம் என்ன தெரியுமா?

உள்நாட்டில் தொழில்வளர்ச்சி ஏற்படாமல் கைமுதலை முடக்குவதும், இருந்துவரும் தொழில்களில் நெருக்கடி என்றகூச்சலைக் கிளப்புவதும், சர்க்காரிடத்தில் மேலும் மேலும் சலுகைகளைப் பெறச்சர்க்காரைமிரட்டுவதுமாகப் பிர்லா படை வரிசையினர், செயலாற்றிவருகிறார்கள். பண்டிதர் பணிவு காட்டக்காட்ட இந்த முதலாளிகளின் முட்டுக்கட்டையும் பலமாகிக்கொண்டு வருகிறது. உள் நாட்டைப் பொறுத்தவரையில், நிலை இது.

பொதுவாக வெளிநாடுகளில்—குறிப்பாக அமெரிக்காவில், இந்தத்தொழில் சீமான்கள், எடுத்துக்கொண்டுவரும் நடவடிக்கைகள், அமெரிக்கா முதலாளிகளின் ஆசையைக்கெடுத்து, நம்பிக்கையை நாசமாக்கி, இந்தியாவில் முதல் போட மட்டும் நிலையைத் தோற்றிவைத்திருக்கிறது. ஆரம்பத்தில், இத்துறையில், எவ்வளவோ ஆர்வத்தோடு இருந்த அமெரிக்கத்தொழில் நிறுவனங்கள், முன்வைத்தக்காலை பின்னுக்கிழுத்துக் கொண்டன. இதன் பலனாக, இந்தியப்பிரதமர் சமதர்மப்பண்டிதர், பலப்பல நிலையில் இருந்து அமெரிக்காவிற்கு அழைப்பு அனுப்பவும், இழந்த நம்பிக்கையை மறுபடியும் புதுப்பிக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியவரானார். இத்துணைக்கண்டத்தின் நெருக்கடியான நிலையை உணர்ந்தும், பிரதமர் படிப்படியாக இறங்கி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

தொழில் வளர்ச்சியில் ஈடுபடுக!

மதக்கல்லூரி அமைப்பது அழிவுத்துறை வேலையாகும்

இந்து மதத்தின் உண்மையான தத்துவங்களைப் பரப்ப, கோவை ராமகிருஷ்ண வித்யாலயத்தில் அடுத்த ஆண்டு முதல் தக்க ஆசிரியர்களைப் பயிற்றுவித்துப் பள்ளிகளுக்கனுப்பி, இந்து மததத்துவங்களைப் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் அரசாங்கத்தால் பதவிக் காலம் நீட்டிக்கப் பெற்ற இந்து அறநிலையத் தலைவர் திரு. சின்னையாபிள்ளை முன் வந்திருக்கிறார்; இதற்காக மடங்கள், கோயில்கள் முதலியவற்றின் பண[உத]வியைக் கோருகிறார். இதனால் குழ[ந்]தைகளுக்கு ஒழுங்கான முறையில் இந்து மதத்தைக் கற்பித்து, மத வளர்ச்சிக்கு வழி செய்ய முடியும் என்று அவர் கருதுகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே இப்படி ஒரு போக்கு.

மதத்தால் மக்கள் என்ன நன்மைகள் அடைந்துவிடக்கூடும்? என்ன நன்மைகளை இதுவரை அடைந்திருக்கிறார்கள்? என்பவற்றை உலக சரித்திரம் நன்கு எடுத்து விளக்குகிறது. நம் நாட்டிலே கூட சைவ-சமணப் போர், சைவ வைணவப் போர், பௌத்த-சமணப் போர், என்பவைகளெல்லாம் நடந்திருக்கின்றன.

எனவே, மதக்கல்வியளிப்பதும் மதவளர்ச்சிக்கான வேலை செய்வதும் குறுகிய நோக்கத்தின் பாற்பட்ட வேலைகளேயாகும். இதற்கெனப் பணம் செலவிடுவது வீணுக்குழைத்து வெட்டியில் பொருளைப் பாழாக்குவதேயாகும்.

இந்த எண்ணத்தைத் தோழர் சின்னையா அவர்கள் கைவிட்டு, தமிழகத்திலே மிகச் சிறந்ததொரு கைத்தொழிற் கல்வி நிலையத்(தக்ஷசிலா நிலையமன்று)தை, விஞ்ஞான ரீதியில் அமைக்க முயலலாம். நம் மாகாணத்தில் எங்கேனும் ஒரு பெருங்காட்டைத் தேர்ந்தெடுத்து காடழித்து, வளம் மிக்க வயல்களாக்கலாம். அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஜெர்மனி, ஜப்பான்போன்ற நாடுகளுக்கு நம் நாட்டு மாணவர்களைப் பொதுச் செலவில் அனுப்பி வைத்துப் பல புதிய தொழில்களைக் கற்று வருமாறு செய்யலாம்.

இவற்றில் விருப்பமில்லையென்றால், கோதாவரியிலிருந்து தாமிரவர்ணி வரையில் வடதெற்காகப் பெரும் படகுகள் போக்குவரத்துக்கேற்றதொரு கால்வாய் வெட்டலாம்.

நாடெங்கும் ஐந்தாண்டுகளில் எல்லா மக்களையும் கல்வி அறிவுடையவர்களாக்கி வைத்து விடுவது என்று திட்டமிட்டுக்கொண்டு, அதற்கென உழைக்கலாம்.

இவ்வாறெல்லாம் செய்தால் நாட்டு மக்களும் நலன் பெறுவர்; நாடும் முன்னேற்றமடையும்; அரசாங்கமும் தங்கள் கடமையை இந்த அறநிலையம் மேற்கொண்டு பணியாற்றுகிறதே என்று கவலையின்றி நிம்மதியாக உட்கார்ந்திருக்கும்.

இவற்றைவிட்டு, இந்துமத தத்துவங்களை மாணவர் உள்ளத்தில் பதியவைக்கும் 'புனித' கைங்கரியத்துக்காகவா ஒரு பி. ஏ., பி. எல். படித்த தோழர் இந்த அளவு முயற்சி எடுத்துக்கொள்வது!

இந்து மதத்தைப் பாதுகாக்கவும் பரப்பவும், அதன் மூல கடவுள்கள் முயற்சி எடுத்துக்கொள்ளும். மனிதர்கள் அம்முயற்சியில் இறங்கினால், கடவுள்கள் சக்தியில்லாமற் போய்விட்டன என்று பரிகசிப்பது போன்ற கடவுள் நிந்தனை ஏற்பட்டு விடும். எனவே, தோழர் சின்னையா அவர்கள் இந்த அழிவுயோசனையை அடியோடு கைவிட்டு, நாட்டின் ஆக்கத்துறையில் இந்த முயற்சியைப் பயன்படுத்தித்தொண்டாற்றினால் நாடு நன்றியுடையதாயிருக்கும்.

சுயராஜ்யத்தில் சுகவாழ்வு

ஆதலால் அரிசி சாப்பிடுவதைக் குறையுங்கள்!

"நாம் வழக்கமாகச் சாப்பிடும் அரிசி, கோதுமை முதலிய உணவுகளை ஓரளவு குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப்பதிலாக, வள்ளிக்கிழங்கு, வாழைப்பழம் முதலியவைகளை உட்கொள்ள வேண்டும். இதன் மூலம் உணவு நெருக்கடியைச் சமாளிக்க வேண்டும். இவற்றைத் தோட்டங்களிலேயே பயிரிட்டுக் கொள்ளலாம்"

என்று சென்னை மாகாண முதல் மந்திரியார் மக்களுக்கு அறிவித்துள்ளார்.

அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த மக்கள், இவ்வறுமை உலகவாழ்வை நம்பி, பாசத்தில் கட்டுண்டுகிடந்து உழல்வதினின்று விடுதலையடைவதற்கு வழிகாட்டுவது பட்டினிகிடக்கும் மக்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும்.

நாம் சுயராஜ்யமடைந்துவிட்டோம். இனிமேல் நமக்குச் சோறு எதற்கு? நாட்டுக்குப் பொதுமொழி இந்தி ஆக்கப்படவேண்டுமென்று கதறிய கூட்டம் அதேபோன்று கோதுமை உணவையும் இருப்பாப்பியது. இப்போது உள்ளதும் கெட்டு, வந்ததும் கெட்டு, வள்ளிக் கிழங்கைச் சாப்பிட்டு உயிர்வாழ வேண்டுமென்று போதிக்கிறார் நம் முதலமைச்சர்.

இதனால் நமநாட்டு மக்களின் நாட்டுச் சமுதாயத்தின் உடல் வன்மை எவ்வளவு கேடுறும் என்பதையும் இதன் பலனாக ஒரு தலைமுறைக்கேனும் மக்கள் வலுவற்றவர்களாகக் கிடக்க நேரிடுமென்பதையும் இது நம்நாட்டையே பலவீனப் படுத்துவதாகுமென்பதையும் முதல்மந்திரியார்உணர்ந்திருக்கிறார் வாழைப்பழத்தில் 'ஏ'சத்திருக்கிறது. வள்ளிக்கிழங்கில் 'பி'சத்திருக்கிறது என்பவையனைத்தும் ஏட்டளவிலிருக்கலாம். ஆனால் சோற்றைத் தின்று உயிர்வாழ்ந்து வந்த மக்கள், வள்ளிக்கிழங்கைத்தின்பதால் வன்மை பெற முடியாதென்பதை அமைச்சரே அனுபவ பூர்வமாகப் பார்த்தறிந்தபின், மக்களுக்கு இந்த உபதேசம் செய்ய முன் வந்திருப்பின் [illegible] இருந்திருக்கும்.

எதிர்பாராத மோதுதல்

பெல்ஜியத்தில் ரோடுகளில், போக்குவரத்துக் காரணமாக ஏற்படும் எதிர்பாராத மோதுதல்கள் 1948 ம் ஆண்டில் மட்டும், 39686 ஏற்பட்டிருக்கின்றன. 1947ல் நடந்தவைகளைக் காட்டிலும் இது 29 சதவீதம் அதிகரித்துள்ளது. 1947ல் 30720 மோதுதல்கள் தான் ஏற்பட்டிருக்கின்றன. 1938ல் 21473 மோதுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1938ம் ஆண்டில் 21413 மோதுதல்கள்தான் ஏற்பட்டிருக்கின்றன. ஆண்டுகள் ஏற ஏற, ரோடு மோதுதல்களும், அதிகமாகிக் கொண்டே வந்திருக்கின்றன. மக்கள் அவசரமாகக் கவனிக்க வேண்டிய வேலைகள் அந்த அளவுக்கு ஏறிக்கொண்டே போகின்றன என்பதைக் காட்டுகிறது [illegible] அங்கக் கணக்கு.

மாலை மணி

சென்னை 5—9—49 திங்கட்கிழமை

பழவேற்காடு படிப்பினை

காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு, மக்கள், பல சந்தர்ப்பங்களிலே பாடங் கற்பிக்க மறந்துவிட்டாலும், சில சந்தர்ப்பங்களிலே மறப்பதில்லை. படிப்பினை கற்பிப்பது பாராட்டுவதற்குரியதொரு பண்புதான்!

ஆளவந்தார்களும், அவர்களுக்கு ஆலோசனை கூறும் நிலையில் இருந்துவரும் ஆட்சி மன்ற உறுப்பினர்களும், நாட்டின் குறைகளைப் போக்குவார்கள்—குற்றங்களைக் களைவார்கள்—நல்லாட்சி நடத்துவார்கள் என்று நம்பிதான், அவர்களை ஆட்சி மன்றத்திலே அமரவைத்தனர் மக்கள்.

ஆட்சி மன்றம் புக, மக்களின் அணைப்பு தேவைப்படுகிற தேர்தல் காலங்களில், தேர்தலில் நின்று வெற்றி பெற்ற அனைவரும், உறுதிமொழிக்கு மேல் உறுதிமொழி கூறினர்—மக்கள் அவைகளை அப்படியே நம்பிவிடும் அளவுக்குக் கூறினர்—கொஞ்சு மொழி பேசினர்—கெஞ்சினர் காந்தியாரின் பெயரைச் சுட்டிக்காட்டி வாக்குரிமைச் சீட்டு முன் மண்டியிட்டுத் தஞ்சம் அடைந்தனர். ஏழைகளைக் காப்பாற்றுவதேஎம்நோக்கம்—சுமையைப் போக்குவதே கோட்பாடு—தொழிலாளர்களின் நலமே எம் கொள்கை—குறைகளை நீக்குவதே எம் கருத்து—குற்றங்களைக் களைதலே எம் செயல்—வாழ்க்கை வசதிகளை அளிப்பதே எம் கடப்பாடு என ஆட்சி முறைப்பட்டியல்' தயாரித்துக்காட்டினர். அவர்களிலே, சத்தியமூர்த்தி 'பிரா...டுகள்' தங்களது ஆட்சி ஏற்படுமாயின், நாட்டில் தேனாறும், பாலாறும் கலந்தோடும்என்று சக்கரைமொழி கூறினர்!

...பாராளும் மன்றம் புகுந்தனர்; தர்பார் தொடங்கப் பெறலாயிற்று—பராக்குக் கூறுவோர் பராக்குக் கூறிக்கொண்டே இருந்தனர். ஆணவம், பீடம் ஏறிய கண்ணியவான்களின் கண்ணையும் மறைத்தது, ...தையும்மறைத்தது. மமதை கோலோச்சிற்று. ஏழைகள் புறக்கணிக்கப்பட்டனர்—தொழிலாளர்கள் சுட்டுத்தள்ளப்பட்டனர் — வரிமேல்வரி விதிக்கப்பட்டது—குறைகளா மக்களே அதைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும்—உணவு இல்லையா, ஒருநாள் உபவாசம் இருங்கள் — ஆடையில்லையா, கைராட்டையைச் சுற்றிக் கதரைப் பெற்றுக்கொள்ளுங்கள் — பேச்சுரிமையா, கிடையாது—எழுத்துரிமையா இல்லை—காங்கிரஸல்லாதவனு, ...லுகை கிடையாது, இவ்வளவும் நடைபெற்றன! இவை ...ஒரு சில மக்களே உணர்ந்தனர்; ஒரு சிலரே கண்...

டித்துப் பாடங்கற்பிக்கிறார்கள்.

மக்களிடத்தில் உறுதிமொழி கூறிச்சென்ற சட்டசபை உறுப்பினர்களும் சரி, நாட்டாண்மைக் கழக, நகராண்மைக் கழக உறுப்பினர்களும் சரி, மன்றம் புகுந்த பிறகு, 'சும்மா இருந்து சுகம் பெறுவதே' பதவியின் இலட்சியமாகக்கொண்டு, வாய்மூடி மௌனிகளாக ஆகிவிடுகின்றனர். இந்தக் காட்சி, மக்களுக்கு வெறுப்பு உணர்வை ஊட்டுகிறது. அதனாலே, பலர் 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' என்ற அலட்சியத்தைக் கொண்டுவிடுகின்றனர். ஆனால், இப்பொழுது நடைபெற்ற ஜில்லாபோர்டு தேர்தலில், சர்க்காருக்கும், தேர்தலில் நிற்கும் உறுப்பினர்களுக்கும், நல்லதொரு பாடங் கற்பிக்கவேண்டும் என்று கருதி, ஒரு அதிசயச் செயலைச் செய்து காட்டியிருக்கிறது ஓரூர்!

"செங்கற்பட்டுஜில்லா, மெதூர் பிர்க்காவைச் சேர்ந்த பழவேற்காடு என்ற சிற்றூரில், வைக்கப்பட்டத் தேர்தல் பெட்டிகளில், யாரும் ஒரு ஓட்டு கூடப் போடவில்லை. தேர்தல் நிலைய அதிகாரிகளும், தேர்தலுக்கு நின்றவர்களுடைய பிரதிநிதிகளும் மாலை 8 மணி வரையிலும் காத்திருந்து விட்டுத் தேர்தல் பெட்டிகளைக் காலியாகவே எடுத்துச் சென்றனர்."

இது பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள செய்தி, பெருமழைகாரணமாக மக்கள் ஓட்டுப் போட வரவில்லையா? இல்லை! வசதியின்மை காரணமாக இருக்கலாமா? அதுவும் இல்லை! நின்றவர்கள் இருவரும்நாட்டுத் 'துரோகி'களா? அதுவும் இல்லை! காங்கிரஸ்காரரே அதில் ஒருவர்! பின் என்னதான் காரணம்? அதுவும் அவ்வூர் மக்களாலேயே விளக்கப்பட்டுப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது.

"இதுவரை இந்த கிராமத்தின் வாக்குரிமைகளைப் பெற்றுச் சென்ற அங்கத்தினர்கள், இந்தக் கிராமத்திற்குள்ள குறைகளைக் கவனித்து ஒன்றுமே செய்யாததனால், இப்போது, இவ்வரிய நிகழ்ச்சியைப் பொதுமக்கள் நடத்திக் காட்டி, சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வராலானார்கள்"

இப்படி ஒரு பாடங் கற்பிக்கும் முறை இதுதான் முதல் தடவை! இதனால் மதியூக மந்திரிகளுக்கோ, அல்லது மன்றம் குழுமியிருக்கும் அங்கத்தினர்களுக்கோ சொரணை பிறக்கவில்லை என்றாலும், அது கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் நல்லதொரு பாடம்—நல்லவர்களின் மனதிலே உறைக்கக்கூடிய பாடம் கற்பிக்க முன்வந்த பழவேற்காடு சிற்றூர் மக்களின் துணிவைப்போற்றுகிறோம். இது ஆச்சரியப்படத்தக்கதொரு நிகழ்ச்சியே என்றாலும், இனிமேல் பொதுநலம் பேணும் பதவியை வாக்குரிமையின் மூலம் அடைய முற்படும் அங்கத்தினர்களுககு, முன்னெச்சரிக்கையாக அச்சமூட்டி அறிவுறுத்தும் நிகழ்ச்சியாக, இது இருக்கட்டும். விழிப்புணர்ச்சியின் தன்மை கண்டு மகிழ்வுறுகிறோம். பாடம் நல்ல படிப்பினைதான்!

கலப்படப் புத்தி

அரசாங்கம் என்றாவது கவனித்ததா?

மத்திய மாகாணத்திலே ஒரு வணிகன் ஆயிரக்கணக்கான டன் வெல்லம் காய்ச்சி, அதில் 20 சதவிகிதம் களிமண்ணைக் கலந்து விற்றுக் கொண்டிருந்ததாக அரசியல் நிர்ணய சபையில் உணவுப்பொருள் கலப்படம் பற்றிய பேச்சு வந்தபோது டாக்டர் பி. எஸ். தேஷ்முக் கூறினார்.

இந்த நாட்டிலே வர்த்தகர் நெஞ்சில் ஈரமற்று மக்களை வஞ்சிப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

தென்னாட்டைப் பொறுத்தவரையில் ரேஷன்கடைகளில்விற்கப்படும் அரிசியை எடுத்துக் கொள்ளுங்கள். அரிசியில் நெல் கலந்திருப்பது இயற்கை. ஆனால் ஏராளமாகக் கல் கலந்திருக்கும். அதுவும் அரிசிக்கும் கல்லுக்கும் வேறுபாடு காணமுடியாதபடி வெள்ளைப் பொடிக் கற்களாகக் கலந்திருக்கும்.மூட்டைக்கு 2 படி கல் என்றாலும் மூட்டை ஒன்றுக்கு 2 ரூபாய் மிஞ்சட்டுமே என்பது வணிகர் கருத்து.

இதே போன்று, எள்ளெண்ணெய், நெய், பால், வெண்ணெய் முதலிய பல பொருள்கள் கலப்படமற்றவைகளாகக் கிடைப்பது கஷ்டம.

கலப்படப் பொருள் விற்பதைத் தடை செய்யும் சட்டங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை நடைமுறையில் சரிவர நிறைவேற்ற வேண்டுமே! சரிவர நிறைவேற்றினால், மக்கள் கலப்படப் பொருள்களை வாங்க நேரிடாதே. கண்டிப்பான முறைகள் கையாளப்பட்டால் இந்தத் தொல்லை ஒழியும்.

சாதி இந்துக்கள் அல்லாதவர்கள்

கோயிலுக்குள் போகக் கூடாது

சேரை (எர்ணகுளம்) என்னும் ஊரில் உள்ள கௌட சாஸ்வதி பிராமணர்களின் கோயில் ஒன்றில் சாதி இந்துக்களல்லாதவர்கள் நுழையக் கூடாதென்று எர்ணகுளம் ஜில்லா நீதிபதி அவர்களால் அக்கோயில் அதிகாரிகளின் மனுவின் மீது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தீண்டப்படாத மக்கள் உயர்வு நாடி உழைப்பதாகக் கூறிக்கொண்டு அதிகார பீடத்தில் அமர்ந்திருப்போர் இதற்கென்ன கூறப்போகின்றனர்.

கோயில் நுழைவு என்பதும் ஆதிதிராவிடர் முன்னேற்றம் என்பதும் வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருக்கின்றதே தவிர, பயன் தரக்கூடியதாக ஆக்க அதிகாரபீடத்தில் இருப்பவர்களால் முடிகிறதா?

முடியாமைக்குக் காரணம்இந்துக் கலாசாரமும், இந்துமத அறநிலையத்தலைவர் வளர்க்க விரும்பும் இந்துமத வெறியுமல்லாமல் வேறென்ன? உணர்வரா அரசாங்கத்தினரும் தோழர் சின்னையா அவர்களும்!

ஏட்டுச் சுரைக்காய்கள்

அ. நி. சபை அங்கத்தினரின் "அரிய" ஆராய்ச்சி

"இந்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இனிமேல் எந்தவிதமான உணவுப்பொருள்களையும் இறக்குமதி செய்யவே கூடாது; கூடவே கூடாது. 1951-வரை பார்த்துக்கொண்டு அப்புறம் இறக்குமதியைத் தடை செய்து விடலாம் என்று கூறுவது தவறு தவறு. அதுவரைகாத்திருப்பதால், நாட்டினருக்குப் பெரும் நஷ்டத்தின் உண்டு பண்ணியவர்களாவோம்" என்று அ. நி. சபை அங்கத்தினராகிய தோழர் ஆர். கே. சித்வா அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

தாம் கூறும் இந்தக் கூற்றுக்கு, "இந்தியாவில் உணவுக்குறைவு என்பதே இல்லை" என்று காரணம் கூறுகிறார். 1948-49-ல்மக்கள் பயன்படுத்தியது,சேதமானது எல்லாம்போக 43, 23,000டன் அதிகப்படியாக மிகுந்துவிட்டதென்றும், கால்நடைகளுக்கும், குறைந்த பிரதேசங்களுக்குக் கடத்திச் செல்வதற்கும் என்று கழித்துப்பார்த்தால் கூட, 13, 23,000டன் தானியங்கள் மீதியாகிவிட்டனவென்றும், அப்படியிருந்தும் 130 கோடி ரூபாய் செலவில் 20 லட்சம் உணவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தோழர் சித்வா புள்ளி விவரங்களைக்கூறுகிறார்.

ஆனால், இங்கு நம்நாட்டில் ஏழைக்குடும்பத்தினர் ஒவ்வொருவரும் 'ரேஷன்'படி தரப்படும் உணவுத்தானியங்களைக்கொண்டு அரைவயிற்று உணவும், வாரத்தில் 2 நாள் உண்ணாவிரதமும் இருக்கவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம் என்பதைத் தோழர் சித்வா உணர்வாரா? அதிகப்படியாகத் தானியங்கள் மிகுந்திருக்கின்றனவென்றால், மக்களுக்கு அவற்றைச்சரியானபடி விநியோகிக்க முயலாமல் சேதமாகவும், கள்ளத்தனமாகக் கடத்திச்செல்லவும் இடங்கொடுத்து, அப்படியும் மிஞ்சியவற்றை மீதிக்கணக்கில் காட்டியிருப்பதன் மூலம் மக்களை அரைப்பட்டினி போட்டுத் துன்புறுத்தும் கொடுமையைச் செய்வானேன்?

தோழர் சித்வா காட்டியபுள்ளி விவரங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களா? அல்லவென்றால், அரசாங்கம் மக்களை அரைப்பட்டினிபோட்டுக் கொடுமைப்படுத்திய குற்றத்தைப் புரிந்ததாகிறதன்றோ?

இந்த மேலிடத்து மர்மங்கள் பொதுமக்களுக்குத் தெளிவாக்கப்படுமா? தெளிவாக்கப்போவது யார்?

போர்த்துகேசியர்க்கு இறுதி எச்சரிக்கை

கோவா மக்கள் கொதிப்பு

சாம்ராஜ்யங்கள் சரிந்து கொ... இக்காலத்தில், ...ர்ச்சுகல் தன்மண்கோட்டையைக் காப்பாற்றிக்கொள்ள படாதபாடு படுகிறது.

ஆங்கில வெள்ளை யேகாதிபத்தியம் இந்தியாவை விட்டுச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது; உலகச் சூழ்நிலை அந்த அளவுக்குக் கொண்டுவந்துவிட்டது; அது வெளியேறிற்று. பிரெஞ்சு இந்தியப் பகுதி மக்களும் உரிமை வாழ்வு வாழ துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வளைந்துகொடுத்துப் பார்த்துவிட்டு, இப்பொழுது வெளியேறி விடுவது என்ற நிலைமைக்கு வந்து கொஞ்சங்கொஞ்சமாகத்தன்பிடியைத் தளர்த்திக்கொண்டு வருகிறது. சந்திரநாகூரை அடியோடு விட்டுவிடும் நிகழ்ச்சியும் நிறைவேறிவிட்டது.

இந்தச் சமயத்தில் கோவாவில் தன் ஏகாதிபத்திய பிடியை வைத்துக் கொண்டிருக்கவே, போர்ச்சுகல் அரசாங்கம் எண்ணுகிறது என்றால், இது வெறும் கேலிக் கூத்தல்லாமல் வேறென்னவாக எண்ணமுடியும்! ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும், ஒரு சிறு சுண்டைக்காய் அளவுள்ள ஏகாதிபத்தியம், உரிமைக் கிளர்ச்சிகள் நாடெங்கும் கொப்பளித்தெழும் இந்த நாளில், அடக்குமுறை ஆட்சியின் மூலம் கோவாவைத் தன்னிடத்திலே வைத்துக் கொள்ள எண்ணுகிறது. எத்தனை நாட்களுக்கு முடியும்! அங்குள்ள மக்கள் கொதித்தெழுந்து, இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர் இப்பொழுது.

மக்களின் மனப்போக்கை அறிந்து போர்த்துகேசியர்கள்

நல்ல யோசனைதான்

மனிதனை மனிதன் இழுத்துச் செல்லும், 'அடிமைச் சின்னம்' ஒழிக்கப்பட வேண்டும் என்பது மனிதமாண்பு படைத்த நல்லறிவாளர்கள் எண்ணமாக இருந்து வருகிறது. மனிதனை மனிதனாக மதிக்காமல், மாடாக்கினைக்கும்படியானமாதிரியில் அமைந்திருக்கும் அமைப்புகள் அனைத்தும் ஒழிக்கப்பட வேண்டியதுதான். இல்லாவிட்டால், மனித சமுதாயத்தின் அடிப்படைத் தன்மையில் ஏற்பட்டிருக்கும் 'ஆண்டான்- அடிமை' களங்கம் அகலவே அகலாது!

சென்னையில் மனிதர்களை, மனிதர்களே இழுத்துச் செல்லும், ரிக்ஷா இழுக்கும் வழக்கம் காலடைவில் ஒழிக்கப்படும் என்றும், அவைகளுக்குப்பதிலாக மோட்டார் விசையால் நகரும் மோட்டார் ரிக்ஷாக்களைப் பயன்படுத்த சென்னை சர்க்கார், ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்ற முயற்சி போற்றிப் பாராட்டத்தகுந்ததேயாகும். மந்திரி கோபாலர் மோட்டார் ரிக்ஷாவில் சவாரி செய்து பார்த்தாராம். பிரயாணம் சௌகரியமாகவே இருக்கிறது என்று பத்திரிகை நிருபர்களிடத்தில் அறிவித்தாராம். உண்மை அப்படித்தான் என்றால் அம்முயற்சி வரவேற்கத்தக்கதே. மனிதன் இழுக்கும் ரிக்ஷாக்களைப் படிப் படியாக ஒழிப்பது நல்ல யோசனை தான்.

இப்பொழுதே வெளியேறி விடுவதுதான் முறை, ஒழுங்கு, நீதியாகும். மக்கள் அறியாமையில் மூழ்கிகிடந்த நாட்களில், வாணிகம் செய்ய வந்த வெள்ளைக்காரர்கள், அவனி ஆள முடிந்தது. அறியாமை போய் அறிவொளி தோன்றி இருக்கும் இக்காலத்தில், எதிரே நிற்கும் மூடுபனி கலைந்துதானே போகும்!

சென்னை யாருடையது?

டாக்டர் சி. ஆர். ரெட்டியின் குறுகிய மனப்பான்மை

சென்னை ஆந்திரர்களுடையதா, தமிழர்களுடையதா என்பது பற்றிய விவாதம், மொழி வாரியாக மாகாணங்களைப் பிரிப்பதென்னும் பேச்சு நடைபெறத்துவங்கிய நாளிலிருந்தே, கடுமையான முறையில் அடிபட்டுக் கொண்டிருக்கிறது.

சென்னை தங்களுடையதே என்கின்றனர் ஆந்திரர்கள். முதலில் சென்னையைத் தங்களிடமே ஒப்படைத்துவிடவேண்டுமென்றனர். பின்னர் அது ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டுமென்றனர்; கூவம் ஆற்றை எல்லையாக வைத்துக் கொண்டு, சென்னை நகரைப் பிரித்து விடவேண்டுமென்றனர். இவ்வாறெல்லாம், ஆந்திரர்கள் கடந்த சிறிது காலமாகப்பேசி வருகின்றனர்.

அண்மையில் கல்வித்துறைகுறித்துச் சொற்பெருக்காற்றச் சென்னை வந்த, ஆந்திரப்பல்கலைக்கழகத்துணைவேந்தர் டாக்டர் சி. ஆர். ரெட்டி "சென்னை நகரம் சரித்திரப்படி ஆந்திரர்களுக்கே உரியதாகும் என்றும் இதை எவரும் மறுக்க முடியாதென்றும்" கூறியுள்ளார்.

சரித்திரத்தைத் துணைக்கிழுத்து தவறான ஒன்றைத்தமிழ்நாட்டிலே கூறிவிட்டுச்செல்வதென்றால், அதிலும் பொறுப்புடைய கல்வித்துறை வல்லுநர் இவ்வாறு பொறுப்பற்ற வகையில் கூறிவிட்டுச்செல்வதென்றால் இது பெரிதும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

சென்னை நகரம், பழைய சரித்திர காலத்தில், வெள்ளையர்கள் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்னர், ஒரு நகரமாகவே இருந்ததில்லை; மிக மிகச் சிறியதொரு கிராமமாகவே இருந்தது. சென்னைக்கு வடக்கே இருக்கும் திருஒற்றியூர் அப்பழங்காலத்தில் சென்னையை விடப் பெரிய பட்டினமாக இருந்தது.

சரித்திரப்படி என்று எடுத்துக் கொண்டால், நெல்லூர் வரை தமிழர்களுக்குச்சொந்தமான இடங்கள் என்றே கூறவேண்டும். தமிழ் மன்னர்கள் ஆண்ட இடங்கள் என்ற காரணத்திற்காக மட்டுமன்று. இன்றைக்கும் நெல்லூர் வரையுள்ள ஊரின் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவே வழங்குவதைக் காணலாம். தமிழர்களுடையவை என்று நாம் அவ்விடங்களைக் கூறுவதற்குக் காரணம் அவை தமிழ் மன்னர்களுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தவை, தமிழ்ப் பெயர்களாலேயே இன்றளவும்வழங்கப்படுபவை ஆகும். மக்கள்தொகையை எண்ணிக் கணக்கிட்டு, அதிக தொகையினராக எவர் இருக்கின்றனரோ அவர்களுடைய ஊர் என்று ஓர் ஊரைநிர்ணயித்து விடுவது ஜனநாயகமாகாது என்று டாக்டர் சி. ஆர். ரெட்டி கூறுவது போல, இன்று நியாயமான முறையில் நாடு பிரிப்பதென்றால், ஆந்திரர்கள் நெல்லூர் வரையில் தமிழர்களிடம் ஒப்புவித்துவிடுவதுதான் ஒழுங்கான-நேர்மையான நியாயமான-செயலாகும்.

தமிழர்களிடம் திருவேங்கடமே (திருப்பதி) தமிழ் நாட்டின் வட எல்லை என்று காட்டுவதற்குப்பல சான்றுகள் இருக்கின்றனமிகப்பழங்கால இலக்கியங்களிலிருந்து வெள்ளையர்கள் இந்நாட்டுக்கு வருமுன் தோற்றுவிக்கப்பட்ட இலக்கியங்கள் வரை தமிழ்நாட்டின் வட எல்லை, திருவேங்கடமாகவே குறிக்கப்பட்டிருக்கிறது.

விஜய நகரத்து இராயர் காலம் தவிர, மற்றைக் காலங்களில் ஆந்திர நாட்டின் பெரும்பகுதி தமிழர் வசமே இருந்தது.

ஆனால் தமிழர்கள் இன்று அந்த அளவு தமிழ் நாட்டுடன் சேர்த்து விட வேண்டுமென்று கோரவில்லை. சரித்திரப்படி திருவேங்கடத்தைத் தங்கள் வட எல்லையாக்க வேண்டுமென்றே கோருகின்றனர்.

இந்நிலையில், சென்னை நகரமே சரித்திரப்படி தங்களுடையதென்றும், கூவத்தைஎல்லையாக வைத்து இதைப்பிரிக்க வேண்டுமென்றும் ஆந்திரப் பாமரர்கள் கூறினால் இது குறித்து வருந்துவோர் இல்லை. ஆனால் ஒரு பொறுப்பான பதவியிலுள்ள டாக்டர் சி. ஆர். ரெட்டி போன்றோர் இப்படி வாய்க்கு வந்தவற்றை உளறிவிடுவதைப் பார்த்து, படித்தவர்களிடையிலும சுயநலம் தோன்றுங்கால் எவ்வளவு குறுகிய புத்திக்கும் இடமளித்து விடுகின்றார்களே என்று வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

பாராட்டுவிழா

1-9-49ம் நாள் மாலை விருதுநகர் காஸ்மாபாலிடன் கிளபின் சென்ற ஆண்டு நிர்வாகஸ்தர்களையும், நடப்பு ஆண்டு நிர்வாகஸ்தர்களையும் பாராட்டி நடந்ததேநீர் விருந்துக்கு தோழர், பி. எ. இராமச்சந்திரன் தலைமை தாங்கினார். கிளப்பின் முன்னேற்றத்தைப் பற்றித்தற்கால காரியதரிசி வே. வ. ச. பாண்டுரெங்கன் அவர்களும், தலைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றும் தோழர்கள் எ. அழகர்சாமி, எஸ். இராசரத்தினவேலு; வே. வ. ச. நடராசன்; மகிழ்ச்சி ஆசிரியர் என். சதானந்தம்; வே. வ. ச. கேசவன் பி. எஸ்சி; என் இராசேந்திரன் பி. எ; தெ. சி. க. சின்னப்பநாடார்; தெ. சி. க. இராசேந்திரன் ஆகியோர் பேசினார்கள். தோழர் இ. கருணாகரன் அவர்கள் கிளப்பின் சென்ற ஆண்டுத்தலைவர் தெ. சி. க. இராசேந்திரன் அவர்களுக்கும், பாராட்டு விழாத்தலைவர் பி. எ. இராமச்சந்திர நாடார் அவர்களுக்கும்மலர்மாலை சூட்ட கூட்டம் இனிது முடிந்தது எனத் தோழர் இராசேந்திரன் அறிவிக்கிறார்.

அமைச்சர் பக்தவத்சலனாருக்கு அர்ப்பணம்

மிகுதியான உணவுப்பொருளை உரமாக்க முயற்சி

அமைச்சர் பக்தவத்சலனார் உணவுப்பஞ்சமென்பது நம் நாட்டில்மட்டுமில்லாமல் வெளிநாடுகளிலும் கடுமையாக ஏற்பட்டிருப்பதால், வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதி விரைவில் நிறுத்தப்படும் என்று அறிவித்தார். ஆனால் அமெரிக்காவில் மக்கள் தாராளமாகப் பயன்படுத்தியதுபோக, மீதியான 8 கோடி டன் உலர்த்தப்பட்ட முட்டைகளை வயல்களுக்கு உரமாகப்போடலாமா என்று யோசித்துவருகின்றனராம். பிரிட்டனுக்கோ, வேறு நாடுகளுக்கோ இவற்றை அனுப்பி[illegible]லாமெனின், அங்கெல்லாம் நிறைய இருப்பதால் வாங்குவாரில்லை. சுயநாட்டில் இவ்வாறு மக்கள் தேவையையும் மிஞ்சக் கூடிய அளவில் உற்பத்திமுறையைப் பெருக்கமுயலாதநம்நாட்டு அமைச்சர்கள் அந்நாடுகளில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று பாமர மக்களிடையே பிரசாரம்செய்ய மறந்துவிடுவதில்லை. எனவே, அமெரிக்காவில் உணவுப்பொருள் உரப்பொருளாகும் அளவுக்கு மிஞ்சிவிடும் செய்தியை அமைச்சர், ப[illegible]வத்சலனாருக்கு அர்ப்பணம் [illegible]ன்றோம்.

எம். எஸ். எம். இரயில்வே ஊழியர்கள் சங்க மாநாடு

பார்க்டவுன் மெமோரியல் ஹாலில்,
நடைபெறும் மேற்படி சங்க மாநாட்டில்,
7-9-49 புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு

தோழர் C. N. அண்ணாத்துரை

சொற்பொழிவாற்றுவார்கள்.

இனி நடப்பவை

சென்னை:— எம். எஸ். எம். இரயில்வே ஊழியர்கள் சங்கம்:— மேற்படி சங்கத்தின் 6-7 ஆண்டு மாநாடுகள் 6, 7-9-49 நாட்களில் சென்னை பார்க்டவுன் மெமோரியல் ஹாலில் மாலைவேளைகளில் நடைபெறும். முதல் நாள் மாநாட்டில் பொதுக்காரியதரிசியான தோழர் டி. வி. ஆனந்தன் தலைமை தாங்குவார். கனம் மந்திரி தோழர் ஹெச். சீதாராமரெட்டி மாநாட்டைத் திறந்து வைப்பார். முதல் நாள் தோழர் எஸ். எம். பாவலில் சொற்பொழிவாற்றுவார்கள். இரண்டாம் நாள் மாநாட்டிற்குத் தோழர் எம். சந்திரசேகரன் தலைமை வகிப்பார். தோழர்கள் டாக்டர் வி. கே. ஜான் எம். எல். சி, ஜி. ராஜமன்னார் எம். எல். எ, டி. செங்கல்வராயன் பி.எ.எல்.எல்.பி., சி. என். அண்ணாத்துரை எம். எ., ஆகியோர் பேசுவார்கள். தோழர் எம். விட்டல்ராவ் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து பணியாற்றுவார்.

திருநெல்வேலி — தோழர்கள் பிச்சாண்டி- இராமலட்சுமி திருமணம் 9-9-49 வெள்ளியன்று காலை 8-30 மணிக்கு திருநெல்வேலி, வெள்ளந்தாங்கிபிள்ளையார்கோவில் 113/13 எண் இல்லத்தில் நடைபெறும். பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை—தோழர்கள் எஸ்.எம். ஏழுமலை- எம். பாலாமணி திருமணம் 11-9-49 ஞாயிறன்று காலை 8-மணிக்கு, இராயபுரம் மீனாட்சியம்மன்பேட்டை சிமிடெரி ரோடு 67-வது எண் இல்லத்தில் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் தோழர்கள், என். ஜீவரத்தினம், டாக்டர் தர்மாம்பாள், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். மாலை தோழர் வீ. வே. முருகேச பாகவதர் தலைமையில் தோழர்கள் மதியழகன், கே. ராமலிங்கம், இ. கே. மணவாளன், எம். எம். சாமி, ஆர். ஜியார்ஜ், எ. பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசுவார்கள்.

கண்ணீர்த் துளிகள்

★

கழகத் தோழர்கள் யாரிடமும் நம்பிக்கையில்லை என்று சொல்லித், தமக்கும் கழகத்துக்கும் வாரசாக ஆக்கிக்கொள்ள பொருந்தாத் திருமணம் செய்துகொண்ட பெரியாரின் போக்குக்காக வருந்தி, "கண்ணீர்த் துளிகளை"ச் சிந்தி, சர்வாதிகாரப்போக்கு கொண்ட பெரியாரின் தலைமையை வெறுத்து, அவர் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்து, "கண்டனக் கணைகளை" ஏவியுள்ள தோழர்கள் :—

மதுரை:—ச. மான்ராசன்
விருதுநகர்.—எஸ். மாரியப்பன்
திருச்செங்கோடு:—டி. எஸ். அபிவு
திண்டுக்கல்:—சோ. மு. துரைரா[illegible]ன்
மன்னார்குடி:—ம. திராவிடமணி
தூத்துக்குடி எஸ். பி. மாரியப்பா
வதம்பச்சேரி (பல்லடம் தாலுக்கா)-ஆறுமுகம், எஸ். பெருமாள் சாமி, ச. பங்காரு, அழகிரிசாமி, ந. சின்னையன், க. கிருஷ்ணசாமி, மு. நடராசன், வி. சுப்பிரமணியம், மா. ராமசாமி, ஆர். ரங்கநாதன், எம். கிருஷ்ணசாமி, சவுண்டப்பன், ச. பழனிச்சாமி, ச. சுப்பிரமணியன், ஆறுமுகம், சுப்பிரமணியம், கே. சவுண்டப்பன், திருமூர்த்தி, வெள்ளியங்கிரி, மு. சவுண்டப்பன், அ. வெங்கடராமன், எ. சுப்பரமணியம், கு. சு. அ. கந்தசாமி, வீ. ஆறுமுகம், பி.முத்துச்சாமி, வி. வெங்கிடசாமி, சு. துரைசாமி, எ. சுப்பையா, எப். ராஜு, ஆர். லக்ஷ்மணன, ந. சுப்பிரமணியன், ஆர். ஆறுமுகன், வி. கே. சுப்பிரமணியன், என், நடராஜு, கு. சுப்பிரமணியன், சவுண்டையப்பன், க. ஜகநாதன், நாச்சி முத்து, க. வெங்கிட்டராமன், ராமசாமி, த. கிருஷ்ணசாமி, சாமிநாதன், எம. கே. எஸ். மணி, எஸ். வெள்ளியங்கிரி, எம. கிருஷ்ணன், எஸ். எழுச்சி, ச. நாச்சி முத்து, ஆர். சவுண்டப்பன், ஆர். ஆறுமுகம், பழனிச்சாமி, முத்துக்கவுண்டன், க. சுப்பிரமணியம, ஆர். குப்புசாமி, கே. வி. ராமசாமி, பி. சுப்பிரமணியம் எம். வி. கே. ராமசாமி, கே. ஆர். எஸ். சாமி.
குலம்பூர்:—கே. உருககுமணி கணேசன்.
கல்லல:—சி. ஆ. பெ. தாஸ்.
ஜோலார்ப்பேட்டை:—வி. வையாபுரி, வி. டி. ராமன், டி. குப்புசாமி, வி. டி. கோவிந்தசாமி, வி. டி. ராமசாமி, கே. எல். துரைசாமி, எம். ராஜு, வி. டி. திருப்பதி, என். எஸ். சாப்ஜான், எம். பெரியதம்பி, சோட்டுசாயபு, தம்பி.
மதுரை— டி. ஆர். ஆர். இரத்தினம்.
சிவகெங்கை— எஸ். சி. கிருஷ்ணன், நடிகன்.
ஏர்வாடி— ஏ. கே. ஜலால், எஸ். என். எம். எம். சலாஹுதீன்.
தஞ்சைகீழவாசல்—எம். சி. பாண்டியன், க. கணபதி, க.ர. பாண்டியன், எஸ்.மாரியமமன், கே. இளங்கோவன், எஸ். கே. ரவேந்திரன், எம. டி.அண்ணாமலை,என். பாச்சிமுத்து, எ.முருகேசன். சி.என். ராஜன.
விழுப்புரம்— இ. எஹயா
ஜோலார்ப்பேட்டை— எம். சாமிநாதன்
மீனம்பாக்கம்— க. இலக்குவன்.
புதுக்கோட்டை— கோ. நவநீதம (மாணவன்)
கோம்பை:—சாமுவேல் விக்டர், மகேசுவரன், ஆ. சி. நடராஜன் கா. தங்கப்பா.
இரங்கூன்— அ. ப. நாராயணசாமி
தியம்புதூர்— மு. துரைபாண்டியன், முத்தையா, பி. அய்யாசாமி, சா. ரெங்கசாமி, ஆறுமுகம், ராமசாமி, அருள்ராஜன், சுப்பையா, வெள்ளையன், மாடசாமி, வெள்ளச்சாமி, செந்தூர்பாண்டி, கருப்பையா
திருச்சி— கே. ஆர். சங்கரதாஸ்
ஆண்டிப்பட்டி— கு. சுப்பிரமணியன், கே. வேம்பாத்தான், அ. மா. ரத்தினம், அ. கருப்பையா, ஆ. பாக்கியநாதன், எஸ். நாராயணசாமி
காரைக்கால்— மா. கிருட்டிணசாமி, ப. கணபதி, எமாணியேல் அகிலன், கோ. சுடர்மணி, சி. எஸ்.எஸ். நாதன், முத்துநடராசன், கோவிந்தராசு, அருளானந்தன், சாமிநாதன், அப்துல்கரீம், ஞானதக்கம், எர்னேஸ்புருட்டஸ், டி. சாமி, கு. செயபாலன், ரெ. கணபதி, செ. அப்துல்லத்தீபு, கு. கபிரியேல், எஸ். திரவியம், ரெனதாஸ், ஆ. ஜோசப், பி. பாங்கிதாஸ், நடராஜன், பாஸ்டின், பெரியநாயகசாமி, வி. ராமக்கிருஷ்ணன், எ. அமலோர், எஸ். அண்ணாமலை, கே. ஆர். நாதன், பி. வெங்கடேசன, எம். கே. பாண்டியன், ஆர். மாசிலாமணி
பெரமபூர்— ம. ச. பீட்டர்
திருமங்கலம்— ரா. தர்மராஜ்
சென்னை— மு. இராஜகோபால்
வாணியம்பாடி— ஜி. வெங்கடேசன்
செயங்கொண்டம்— கே. எஸ். காசிம், ஆ. ராமசாமி, எஸ். நாகராசு
அருப்புக்கோட்டை— அரு. சிதம்பரம்
பொள்ளாச்சி— டி. எஸ். லிங்கப்பா
திருச்சி— சீனிராமசந்திரன் (மாணவன்)
புதூர்— பி. பெருமாள்சாமி
திருவாரூர்— டி. சிங்காரம்
காருமணிக்குப்பம்— எம். குப்புசாமி
வடசென்னை— கே. எஸ். துரைசாமி
சென்னை—சட்டக்கல்லூரி மாணவர்கள்:—எம். நடராசன் B. A.(Hon) அ. கு, ஆறுமுகம் B. A., எம். இராமையா B. A., சு. நாசியமன் B. A. (Hon) அரி. இரு. சுப்பிரமணியன் B. A., இ. கோதண்டராமன் B. A., நா. சிதம்பரம் B. A., சீ. கணேசன் B. A., பா. கார்த்திசன் B. A., கோ. ரா. முனியாண்டி B. A., பெ. சோமசுந்தரம் B. A., ம. சுப்பிரமணியன் B.Sc., த.இராமலிங்கம் B.A., வா. சந்திர சேகரன் B .A., சி. ரா. முத்துசாமி, B. A.,
இராமநாய்க்கன்பட்டி:—சி. அருணாசலம், மு. அருணாசலம், எம்.எம். அருணாசலம், அ. நடராசன், எஸ். காசிராஜன், அ. ரத்தினம், வே. அ. வேல்பாண்டியன், க. ரத்தினம், எ. ராஜகனி, மு. கன்னியப்பன், மு. காளியப்பன், கே. அய்யம்பெருமாள், கி. பழனிசாமி, எம். இரத்தினசாமி, அ. கந்தசாமி, எம். நடராஜன், க. ஆவுடையப்பன்
திருத்துறைப்பூண்டி:—டி. ஆர். சீனிவாசன்
நாகை:—கா.ரெ. பத்மநாபன்
மேட்டுப்பாளையம் (கோவை):—வி. தெ. திருஞானசம்பந்தம்
நாராயணவனம்:—டி. எஸ். சொக்கலிங்கம்

பருக நீர் பாலைவனத்தில்...

—[1-ம் பக்கம் தொடர்ச்சி]—

வருவதைத் தெரிந்தும், இத்துணைக்கண்டத்திற்குப் பாதகம் ஏற்படக்கூடிய போக்கில், தங்களுக்குச் சலுகைகள் காட்டப்படவேண்டுமென்று, கோரிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக விதிக்க ஆரம்பித்து விட்டன அமெரிக்கத் தொழில் அரசுகள். இந்த நிர்க்கதியான நிலையைப் பண்டிதருக்குக் கொடுத்தவர்கள் பண்டிதரின் பரிபூர்ண நம்பிக்கைக்குப் பாத்திரமான இந்தியத் தொழில் அரசுகள்தான. இத்தொழில் அரசுகளின் துரோகச் சிந்தனை, வெட்டவெளிச்சமான பின்னராவது, பண்டிதர், அவர்கள் கூட்டுறவைக் கத்தரித்துக் கொண்டாரா என்றால், இல்லை என்றுதான் மனவேதனையோடு கூறவேண்டியதாக இருக்கிறது.

அமெரிக்காவில், எல்லா இனங்களிலும் ஏராளமாகப் பொருள் உற்பத்திச் செய்யப்படுகின்றன-வேறு எந்தச் சந்தைகளிலாவது, அவ்வாறு அதிகமாக உற்பத்தியாகும் பொருட்களை விற்றாக வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு இருந்து வருகிறது. மூலதனமும் அதிக அளவில் சேர்ந்து போய் இருக்கிறது. அதனையும், நல்ல லாபம் கிடைக்கும் முறையில, வேறு நாடுகளில் இறக்கி, உற்பத்தியைப் பெருக்கி, மற்றச் சந்தைகளையும் பிடித்தாக வேண்டுமென்ற நெருக்கடி வேறு அமெரிக்காவிற்கு இருக்கிறது. உடனடியாக அமெரிக்கா, இதற்குப் பரிகாரம் தேடாமல இருந்து விடுமானால், அங்கு முதலாளித்துவம் முறிந்து, அந்நாட்டுக் குழப்பமும் ஏற்படுவது நிச்சயம். வரவிருக்கும் அந்தகால ஆபத்திலிருந்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அமெரிக்கத்தொழில் அரசுகள் பல ஒன்றுகூடி, இந்தியாவை நடுநாயகமாக வைத்துக் கொண்டு, பலப்பல தொழிற்சாலைகளை ஏற்படுத்திப் பண்டங்களை உற்பத்திச்செய்து இந்தியாவைச் சுற்றியுள்ள ஆசிய மார்க்கெட்டுகளைக் கைப்பற்றுவது என்று திட்டமிட்டு இருந்தன. அதற்காக அமெரிக்காவிலுள்ள, அகில உலக பாங்க் மூலமாக இருநூறு கோடி டாலருக்குக் கடன் பெறுவது என்று அங்குள்ள பெரும் பெரும் தொழில் நிறுவனங்கள் முடிவுக்கு வந்திருந்தன. அறுபது சதவிகிதம் அமெரிக்காவும், மீதமுள்ள நாற்பது சதவிகிதத்தை இந்தியா உள்நாட்டிலும் பெறுவதென்பதும், இந்த முறையில் ஆரம்பிக்கப்படும் தொழில்கள் அமெரிக்க பாங்கியின் மேல்பார்வையில் பதினைந்து ஆண்டுகள் வரை இருந்துவருவதென்பதும், அதுவரையில் ஏற்படும் இலாபத்தை அமெரிக்காவிற்கு அனுப்ப எந்தவித சர்க்கார் தடையும் இருக்கக்கூடாதென்பதும், அமெரிக்கத் தொழில் ஸ்தாபனங்களின் கோரிக்கையாகும். இந்த முயற்சிக்கு அமெரிக்க சர்க்காரின் ஆசியும், ஆதரவும் கிடைத்து விட்டது. அதற்கான ஆரம்ப வேலையும் தொடங்கப்பட்டாய் விட்டது.

இந்த நிலையில மற்றவர்கள் [illegible] நாற்பது சத விகித [illegible] சமீபத்தில் அமெரிக்கா சென்ற இந்தியத்தொழில் [illegible] தொடர்பை, [illegible] தொழில்ஸ்தா[illegible] ஏற்படுத்திக்கொள்ள [illegible] தன்மீது, இந்தியத் தொழில் அரசுகள இழந்து [illegible] வேண்டும்

இந்தியா சர்க்கார் பெற்றால்தான், பண்டிதரின் வாக்குறுதிகளை மற்றவர் நம்புவதில் அர்த்தம் உண்டு என்றும், நாற்பது சதவிகித முதலும் அப்பொழுதுதான் இந்தியாவில் கிடைக்குமென்றும், அமெரிக்கா சென்ற இந்தியா தொழில் அரசர்கள், அமெரிக்கரிடம் பீதியைக்கிளப்பினர்.

யுத்தகாலத்தில் கிடைத்தது போலவே கொள்ளை இலாபம் கிடைக்கவேண்டுமென்ற உள்நோக்கத்துடனும், எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் இலாப வேட்டை ஆட அனுமதி வேண்டும் என்ற எண்ணத்துடனும், இந்தியா முதலாளிகள், நாட்டின் தொழில் வளத்தை நாசம் செய்துவருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இதன் பலனாக உற்பத்தி முனையில் குழப்பம் ஏற்பட்டு இருப்பதும் மறைக்க முடியாத உண்மையாகும். இந்த நெருக்கடிக்கு வேறு பலமான காரணங்களும் உண்டு. இப்பொழுது அதனை ஆராயவேண்டிய அவசியம் இல்லை.

இந்த நெருக்கடியை அமெரிக்க முதலாளிகளுக்கு எடுத்துக் காட்டி, அமெரிக்கர்கள் கொண்டிருந்த ஆர்வத்தையும் ஆசையையும் மட்டந்தட்டிவிட்டார்கள், அமெரிக்கா சுற்றச்சென்ற இந்தியத் தொழில் அரசர்கள். இந்திய மக்களின் நலத்தைக் காக்க அல்ல, இந்த அரும்பணியை அவர்கள் செய்தது. சொந்த இலாபத்தைக்கருத்தில்கொண்டுதான், இந்த விஷம போதனையைப் புரிந்தார்கள். அமெரிக்க முதலாளிகளுக்கும் இந்திய முதலாளிகளுக்கும் குறிக்கோள் ஒன்றுதான். மக்கள் நல்வாழ்வல்ல இருவருக்கும் நோக்கம். நாட்டின் செல்வப் பெருக்கமல்ல இருவர் நாட்டமும். மக்களைச் சுரண்டவேண்டும் என்பதுதான் இருவர் கோட்பாடும். விளையும் பயனை அனுபவிப்பதில்தான் இருவருக்கும் பிணக்கு. பணம் குவிந்தால் இருவரும் வெவ்வேறாகத்தானே பகிர்ந்து கொள்ளவேண்டும்? தாயும் பிள்ளையானாலும வயிறும் வாயும் வேறுதானே? போட்டியும் பொறாமையும் எப்படி ஏற்படாமல இருக்க முடியும்? அதன் விளைவுதான், உண்மையான காரணம், இந்தியத் தொழில் அரசுகளின் துர்போதனைக்கு!

இந்த துர்போதனையின் விளைவாக அமெரிக்காவில் உள்ள பிரபலமான ஜெனரல் டயர்ஸ் கம்பெனியானது, இந்தியாவில் தொழிற்சாலை ஆரம்பிக்கஇருந்த முடிவை மாற்றிக்கொண்டு விட்டது.

பிரபல விஞ்ஞானி சர். சி. வி. இராமனின் நண்பர் ஒருவர் 1919-ல் தொழில் துண்கலை ஆராய்ச்சியில் பயிற்சிபெறுவதற்காக அமெரிக்கா சென்றார். அத்துறையில் தேர்ந்த நிபுணராகி, பல அமெரிக்கத் தொழில ஸ்தாபனங்களின், தொழில் ஆலோசகராக கடந்த முப்பது வருடங்களாக அமெரிக்காவில் வேலைபார்த்து வருகிறார். அவருடைய திறமைக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு. கம்பியில்லாத் தந்தி ஆரம்பநிலையில் இருந்த பொழுது, அதற்கான கருவியைப் பளிங்கில் உருவாக்கி அமெரிக்கர்களின் நன்மதிப்பை

யைப்பெற்றவர் ஆவார். அவர் ஒரு சென்னை முஸ்லிம். பெயர் தோழர் எச.எம். ரசாக் என்பதாகும்.

தோழர் ரசாக் ஒரு 'இந்தியனாக' இருந்தும், அவர் பெற்றுள்ள பயிற்சியை இந்தியா பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டது. சர். சி. வி. ராமன் சமீபத்தில் அமெரிக்கா சென்ற பொழுது, ரசாக்கின் புகழ் அமெரிக்காவில் பரவி இருப்பதைப்பார்த்து, அவருடைய திறமையை இந்தியா பயன்படுத்திக் கொள்வது நல்லது என்று, இந்தியா சர்க்காருக்கு எழுதினார். இந்தியாவில் முதல் போடத்தயாராக இருந்த அமெரிக்க முதலாளிகளின் தொழில் ஆலோசகராக இருக்கும் வாய்ப்புப்பெற்றவர் யார் என்று நினைக்கிறீர்கள். இதே, சென்னை முஸ்லிம் ரசாக்தான்-அவரை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை! அதற்கு பதிலாக, சியாங்கே-ஷேக்கிற்கு திட்டம் தயாரிப்பவராக இருந்த டாக்டர் சாலமென்ட்ரான் என்பவருக்கு, இந்திய சர்க்கார் அழைப்பு அனுப்பியது. எப்படி இந்த அவக்கேடு- இந்திய சர்க்காரின் போக்கிற்கு எந்தப் பெயர் இட்டு அழைப்பது?

சமீபத்தில், பிர்லா அமெரிக்காவில் சுற்றிவந்தபொழுது, தோழர் ரசாக் அவர்களுக்கும் அமெரிக்க தொழில் அரசுகளுக்கும் உள்ள தொடர்பைக் கத்தரித்துவிட்டு, தமது தொழில் ஆலோசகராக இருக்கச்செய்ய முயன்றார். ஆனால் ரசாக் மறுத்து விட்டார்.

இந்தியாவில், அமெரிக்கா முதல் போட இருந்ததைத் தள்ளிப்போட, இந்திய முதலாளிகள் எடுத்துக்கொண்ட முயற்சியைத் தோழர் ரசாக், இந்திய சர்க்காருக்கு அறிவித்துவிட்டார், விளக்கமாக. இந்திய சர்க்காரும், ஆத்திரம் கொண்டிருக்கிறது. இந்த ஆத்திரம், தங்களை ஒன்றும் செய்துவிடாதென்பதை, இந்திய முதலாளிகள் அறிவர்.

இந்த உண்மையை அறிய வந்த பின்னர்தான், பண்டிதர், அமெரிக்கா முதல், இங்குஇறக்குமதியாவதற்கான, நம்பிக்கையூட்டும் பேச்சுகளை அடிக்கடி பேசி வருகிறார். அமெரிக்காவிற்கும் சேர்ல் செல்லுகிறார். அமெரிக்கத் தூதுவராக இருக்கும் ஆண்டர்சனும், அதற்குத்தான் அமெரிக்க சர்க்காரால் அழைக்கப்பட்டிருக்கிறார்.

பாலைவனத்தில், பருக நீர் தேடுகிறார் பண்டிதர். அமெரிக்கப் பிரயாணத்தின் பொருள் அதுதான். நீர் கிடைக்காது. அமெரிக்க, அன்பு- ஆதரவு- உதவி- அனைத்தும் பொன் விலங்கு பூட்டும் பணிதான்!

[3—9—49-ல் வெளிவந்த 'பிளிட்ஸ்' ஆங்கில இதழில் தோழர் ஜி. கே. ரெட்டி எழுதியுள்ள கட்டுரையை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இது எழுதப்பட்டுள்ளது.]

அறிவிப்பு

ஏஜெண்டுகள் தங்கள் பாக்கியை 8-9-49க்குள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்கு பத்திரிகை கண்டிப்பாக அனுப்பப்பட மாட்டாது.

மானேஜர்

சம்பள உயர்வு வேண்டாத வள்ளல்கள்!

இந்தியாவில்வந்து குடியேறுவார்களா?

அமெரிக்காவில் 120,000 உறுப்பினர்களைக் கொண்ட, பெரிய ஜவுளித்தொழிலாளர் யூனியன் ஒன்று, தங்களுக்குச் சம்பளஉயர்வு வேண்டாமென்று தீர்மானித்துவிட்டதாம். பத்து ஆண்டுகளாக இத்தகையச் சம்பவம் நிகழ்ந்தது கிடையாதாம். சம்பள உயர்வு கேட்கவேண்டிய இன்றியமையாமை இருந்தும் கூட தொழிலாளர் யூனியன், இந்தமுடிவிற்குவந்திருக்கிறதாம்.

இந்த முடிவைப்பின் பற்றும்படியாக, இங்குள்ள-தொழிலாளர்களை அல்ல—முதலாளிமார்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அமெரிக்காவிலுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும், இங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிக மிக மட்டமானதாகும். எனவே மிருகம்போல வாழ்வதற்குக்கூட வகை இல்லாத தொழிலாளர்களைக் கூலிஉயர்வு கேட்கக்கூடாது என்று கேட்டுக் கொள்வது பொருந்தாது.

இந்த முதலாளிகள், மக்களைப் பட்டினி போட்டுக் கொன்றுகூட, பணத்தை அம்பாரமாகக் குவித்துவைத்திருக்கிறார்கள்—அந்தப் பணக்கோட்டைக்குள், ஆட்சி பீடத்தில் உள்ள பலபல விடுதலை வீரர்களை எல்லாம்கூட சிறைவைத்து இருக்கிறார்கள். போட்ட முதலுக்குமேல சில தொழில்களில் நான்கு மடங்கு ஐந்து மடங்கு இலாபம் சம்பாதித்திருக்கிறார்கள் [illegible] முதலாளிகள். அவர்கள் [illegible] அமெரிக்க ஜவுளித்தொழிலாளர்கள் நடந்துகொள்வது போல், இலாப நோக்கத்தை அறவே-சில காலைக்காவது- ஒழித்துவிட்டு, மக்களின் தேவையைப் பூர்த்திச்செய்ய முன்வரவேண்டும். முன்வருமாறு, டில்லி தேவதைகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சிறை வாழ்வோருக்கு இந்த உரிமை ஏது?

இது நிறைவேறுவது கஷ்டமானதாக இருக்குமானால், அமெரிக்காவில் கூலி உயர்வு வேண்டாமென்று கூறிய தொழிலாளர் வள்ளல்களை, இந்தியாவில் வந்து குடியேறச் செய்துவிட்டால், இங்கிருக்கிற முதலாளிகளும் மகிழ்ச்சி அடைவர் ஆட்சியாளர்களும் அடக்குமுறைகளைத் தேடவேண்டிய அவசியமிருக்காது!

அமெரிக்காவில் தொழிலாளர் வாங்கும் கூலி அளவிற்கு, இந்த முதலாளிகள் கூலி கொடுப்பது என்றால், அவர்கள் ஏற்கனவே சேமித்துவைத்துள்ள பணம் கூட அதற்குப் போதாமல் போய்விடுமே அந்த நிலையில். தொழிலாளர் கிளர்ச்சியும் வலுவடையுமே, அதிகமான அடக்குமுறைகளை வீசவேண்டிய நிலையும் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுமே, என்பதை நினைக்கும் பொழுதுதான், ஆட்சியாளர்களும், அவர்களுக்குப் பின் பலமாக இருக்கும் இந்நாட்டு முதலாளிகளும், கூலி உயர்வை வலிய முன்வந்து வேண்டாமென்று, வெறுத்துத்தள்ளும் வள்ளல்கள் வாழும் அமெரிக்காவிற்கே குடியேறிடுவிவது மிக மிக நல்லது என்றுகூறத் தோன்றுகிறது! நடக்குமா? முடியுமா?

"அபிநவ சிவாஜி" தோன்றிவிட்டார்

சனாதன தர்மத்துக்கு புதுயோகம் பிறக்கிறது!

ஆர். எஸ். எஸ். தலைவர் 'குருஜி ஸ்ரீ மாதவராவ் சதாசிவ கோல்வால்கா'ர் டில்லியில் கரபாத்திர சாமியை சந்தித்தாராம். பல வரவேற்புஇதழ்கள், சமஸ்கிருதத்தில் வாசித்து அளிக்கப்பட்டதாம. அபிநவசிவாஜி என்ற கோல்வால்கரை சிறப்பித்துக் கூறப்பட்டதாம். இனி நாட்டுக்கு-இல்லை-சனாதன தர்மத்துக்கு நல்ல யோகந்தான! சிவாஜி, மீண்டும தோன்றுவது என்றால் சனாதனம தழைக்காது என்று எவ்வாறு சொல்ல முடியும்? ஆனால், இன்று அழியாது ஒழிந்து தாமம ஒன்றும காணோம, புதிய சக்திகளுக்கு முன்னால். அவசியமற்ற, தேவைப்படாத, விரும்பக்கூடாத, எந்த தர்மமானாலும அழிந்தொழிந்து தான போகும். என்றோ பிணமாகிப்போய் புழுத்த-பொறுக்க முடியாத நாற்றமடித்துக் கொண்டிருக்கும் (அ)தர்மத்தை காக்க கோல்வால்கர்களும் கரபாத்திரர்களும எடுத்துக்கொள்ளும் முயற்சி வெற்றிபெறாது என்று எச்சரிக்கிறோம. பிறர் உழைப்பிலே உயர்ந்தவர்களுக்கு, அதனை விட்டொழித்துவிட்டு நல்வழிப்படுவது என்பது முடியாததுதான். மக்கள சக்தி, காலப்போக்கில, அவர்களுள் பிடிவாதத்திற்குத் தகுந்த பதில் அளிக்கத்தவறிவிடாது.

பாராட்டுக் கூட்டம்

மதுரா மேட்டுப்பாளையம், செப்,4-

மாதவரம் பிர்காவில் ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி பெற்ற திருவொற்றியூர் தோழர் T. சண்முகம் அவர்களைப் பாராட்ட, ஒரு பொதுக்கூட்டம், மதுரா மேட்டுப்பாளையத்தில் 3-9-49-மாலை 6 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர், N. தண்டபாணி அவர்கள் தலைமை வகித்து, வெற்றியின் உண்மைப் பொருளையும் காங்கிரஸ் ஆட்சியின் கொடுமையையும எடுத்துக்கூறினர். தோழர்கள். காஞ்சி, கல்யாண சுந்தரம், 'திராவிடன்' ஆசிரியர் N. V. நடராஜன் ஆகியஇருவர்களும், தோழர் சண்முகத்தைக்குறித்துப் பாராட்டிப்பேசினார்கள. முடிவில் தோழர் சண்முகம், தக்க முறையில் பதில் அளித்தார். கூட்ட முக்கியஸ்தர் தோழர், பாலு அவர்கள் சார்பில் நன்றி கூறப்பட்டு, கூட்டம் முடிவுற்றது.

முக்கிய அறிவிப்பு

கழக சம்பந்தமான அலுவல்களைப்பற்றிக் கலந்து பேச விரும்புவோர், மாலை 4-மணியிலிருந்து 6-மணிக்குள்ளாக, கழக அலுவலகக் கட்டிடத்தில் (7, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை) வந்து அலுவலகப் பொறுப்பாளரைக் கண்டு பேசலாம.

—ஆசிரியர்.

அறிவிப்பு

ரெடிமேட் முட்டை பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street. Madras-1.